உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## வாசிப்பு

### அதிமேற் பிரிவு (தரம்7,8,9)

# தமிழர் புத்தாண்டு

தைப் பொங்கல் எனப் போற்றப்படுகின்ற இந்நாள் தமிழருடைய புத்தாண்டுப் பிறப்பாகும்.

இத்திருநாள் இயற்கையைப் போற்றி வாழ்ந்த தமிழருடைய சிந்தனை வளர்ச்சியால் உருவான நாளாகும்.

இந்த உலகிலே மழை பெய்வதற்கும், பயிர்கள் நீரையும், ஒளியையும் பெற்றுச் செழிப்பதற்கும், உயிர்களுக்கு வேண்டிய உணவுகள் விளைவதற்கு மூலமாக விளங்குவது ஞாயிறு ஆகும்.

இந்த ஞாயிற்றைப் போற்றுவதற்காக எடுக்கப்பட்ட கொண்டாட்டமே தைப் பொங்கலாகும்.

பண்டைத் தமிழருடைய மண்ணிலே அவனுடைய விருந்து ஓம்பற் பண்பு சிறக்கும்.

முக்கனிகளும் முற்றிக் கனிந்து இஞ்சி, மஞ்சள், கரும்பு என்பன முதிர்ந்து, செந்நெல் விளைந்து வீடு வருகின்ற காலம் தைத் திங்களாகும்.

அத்திங்களின் முதல்நாளை வாழ்வின் இன்பங்களைச் சேர்க்கின்ற நாளாகக் கொண்டாடுகிறோம்.

சுற்றம் சூழப் பொங்கிக் கொண்டாடி மகிழும் நாள்.

இதனையே தைப் பொங்கல் என வாழ்த்துகிறோம்.

பொங்கலன்று வைகறையில் நீராடி, புத்தாடை அணிந்து கருமங்களை மேற்கொள்கிறோம்.

பொங்கற் பானைக்கு இஞ்சி, மஞ்சள் இலை கட்டுவர்.

பானையை மண்ணடுப்பில் ஏற்றி பசும்பால் பெய்வர்.

பால் பொங்கிவரும்போது மகிழ்ச்சி ஆரவாரத்துடன் புத்தரிசியை இடுவர்.

கதிரவனால் கிடைக்கும் இயற்கைப் பயன்களைப் பயன்படுத்துவர்.

தலை வாழையிலையை விரித்து பொங்கல் முக்கனிகள், கரும்பு பண்ணியங்கள் படைத்து சூரியனைத் தரிசித்து சுற்றம் சூழ உண்டு மகிழ்வர்.